

மதுரை வடக்கு மாவட்டம் மேற்கு சட்டமன்றத் தொகுதி பரவை பேரூராட்சிக்குட்பட்ட பரவை, சத்தியமூர்த்தி நகர், ஊர்மெச்சிகுளம் உள்ளிட்ட பகுதிகளில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஏழாயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் தனச்செல்வம், ஜி.பி.ராஜா, கணேசன், ஆர்.கே.ஜெயராமன், சிறைச்செல்வன், ராஜாமணி, மனோகரன், எம்.இளங்கோ, பரவை அன்புச்செல்வன், வெற்றிச்செல்வன், ஐயப்பன், வீரராகவன், மருதுபாண்டியன், சசிக்குமார், மதிவெங்கடேஷ், சுதன், அன்பழகன், தவமணி, காவேரி, என்.எஸ்.மணி, பாபு, முருகேசன், பாக்யராஜ் என்ற ராஜேஷ், துரை சரவணன், பைகரா சசிதேவா, கருணாநிதி, குமார் மற்றும் கழக நிர்வாகிகள், பேரூராட்சி கவுன்சிலர்கள், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க கழகத்தின் சார்பாக புனித ரமலான் மாதத்தை முன்னிட்டு ”இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஏற்பாட்டிலும் தலைமையிலும், முப்தி முஹம்மது, ரூஹுல் ஹக் ஹஜ்ரத் தலைவர் திருச்சி மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை முன்னிலையில் நடைபெற்றது .

### 1971 இல் வேளாண் பல்கலைக் கழகம் கலைஞரால் தொடங்கப்பட்டது!

# 72 ஆயிரத்து 624 மாணவர்கள் பயின்று இருக்கிறார்கள்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தகவல்!

சென்னை, மார்ச் 31 -

சட்டப் பேரவையில் உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் தனியார் வேளாண் கல்லூரிகள் தொடங்க அரசு முன் வருமா என்று கேள்வி எழுப்பினார் அதற்கு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பதில ளிக்கையில் 1971 இல் வேளாண் பல்கலைக் கழகம் கலைஞர் அவர்க ளால் தொடங்கப்பட்டது. இதுவரை 72 ஆயிரத்து 624 மாணவர்கள் பயின்று இருக்கிறார்கள் என்றார்.

இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு:

**ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:** தனியார் வேளாண் கல்லூ ரிகள் தொடங்க அனுமதி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



அப்படி உள்ளது என்றால், இந்த ஆண்டு தனியாருக்கு அரசு அனுமதி வழங்க வாய்ப்புள்ளதா என தங் கள் வாயிலாக அறிய விரும் புகிறேன்.

**எம்.ஆர்.கே. பன்னீர்செல வம்:** தனியார் வேளாண் கல்லூரிகள் துவங்குவதற்கு தற்போது அனுமதி வழங் காமல் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. 1971ல் கலைஞர் அவர்களால் வேளாண் பல்கலைக்கழ கம் துவக்கப்பட்டது. இப்போது பல்வேறு நிலை யில் ஆராய்ச்சிகள், அதே போல கல்லூரிகள் அதிக மாக இருக்கிற காரணத் தினால், மாணவர்கள் கிட் டத்தட்ட 72 ஆயிரத்து 624 மாணவர்கள் பயின்று வெளியே வந்திருக்கிறார் கள். ஆண்டுதோறும் கிட் டத்தட்ட 3 ஆயிரம் பேர், 4 ஆயிரம் பேர் என்றளவில் படிக்கக்கூடிய வாய்ப்பு களை அதிகமாகப் பெற்று, அதற்குரிய வேலைவாய்ப் புகள் சற்று குறை வாகத் தான் இருக்கிறது. அதனால் பல ஆராய்ச்சி மாணவர் கள் வெளிநாடுகளுக்குச் சென்று, நல்ல திறம்பட செயலாற்றிக் கொண்டிருக் கிறார்கள்.

வேளாண் பல்கலைக்கழ கத்தில் படித்த பல்வேறு மாணவர்கள் I.A.S., I.P.S. என்று பல்வேறு பணிகளுக் குச் செல்கிற வாய்ப்புக ளும் அதிகமாக இருக்கி றது. அதேபோல, வேளாண் துறையில் அதிக மான வளர்ச்சி வருவதற்கு இந்தக் கல்லூரி பயனுள்ள தாக இருந்து கொண்டிருக் கிறது. ஆக இருந்தாலும், இப்போது உடனடியாக வேலை கிடைக்கிற வாய்ப் புகள் சற்று குறைவாக இருக்கிற காரணத்தினா லும், மாணவர்கள் அதிக மாக இருப்பதனாலும் தனி யாருக்கு அனுமதி வழங்கு வது நிறுத்தி வைக்கப்பட்டி ருக்கிறது என்ற செய்தியை உறுப்பினர் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் பதிலளித்தார்.

### கல்வராயன் மலை - ஏலகிரி உள்ளிட்ட

# மலைப் பகுதிகளில் புதைவட மின் கம்பிகளை பதிக்க வேண்டும்!

## சட்டப் பேரவையில் சங்கராபுரம் – தா.உதயசூரியன் கோரிக்கை!

சென்னை, மார்ச் 31 -

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது சங்கராபுரம் தொகுதி உறுப்பினர் தா.உதயசூரி யன் கல்வராயன் மலை, ஏலகிரி, கொல்லிமலை, ஏற்காடு, கொடைகாணல் போன்ற மலைப்பகுதி களில் புதைவட மின் கம்பி களை அமைத்திட வேண் டும் என்று கோரிக்கை விடுத்தார்.

**தா.உதயசூரியன்:** கல்வரா யன்மலை, ஏலகிரி, கொல் லிமலை, ஏற்காடு, கொடைக் கானல் போன்ற மலைப் பகுதிகள், கடல் மட்டத்தி லிருந்து 800 மீட்டர், 900 மீட்டர் உயரத்தில் இருப்ப தால், நெடுந்தூரம் மின் கம் பங்கள் செல்லும்போது மழைக்காலங்களில் பழுத டையும் சூழ்நிலை ஏற்படு கின்றன. முழுமையான அளவில் பழுதுகளை நீக்கு வதற்கு கால தாமதமாகின் றன. அமைச்சர் அவர்கள் cable wires-ஐப் பதித்துவிட் டால், அத்தகைய இடற்பா டுகள் ஏற்படும் வாய்ப்பு உருவாகாமல் இருக்கும். ஆகவே அமைச்சர் அவர் கள் மலைப் பகுதிகளில் cable wires-ஐப் பதிப்பதற்கு முன்வருவார்களா ?

**வி. செந்தில்பாலாஜி:** ஏற் கெனவே இந்த அவையில் இதுகுறித்து எடுத்துச்சொல் லியிருக்கிறேன். மாண்பு



மிகு முதலமைச்சர் அவர் கள் மாநகராட்சிப் பகுதி களில் புதைவடக் கம்பி களை முழுமையாக நறை வேற்றிட வேண்டும் என்று உத்தரவுகளை வழங்கியுள் ளார்கள்.

சென்னை மாவட்ட தைப் பொறுத்தவரையில், ஐந்து மண்டலங்களில் அந் தப் பணிகள் நிலுவையில் இருக்கின்றன.

அதை விரைவுப்படுத்த வேண்டும் என்று அறிவு றுத்தியிருக்கின்றார்கள். மாநகராட்சிப் பணிகள் முடிவ டைந்தவுடன் அடுத் தக்கட்டத்தில் முன்னு ரிமை அடிப்படையில், எங்கு தேவை ஏற்படுகி றதோ மலைப் பகுதிகள் போன்ற இடங்களில் தேவையேற்படின், நிதிநி லைமைக்கேற்ப அரசு பரிசீ லிக்கும் என்பதை மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



முதல்வர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்டம் செல்லூர் பகுதி திமுக சார்பாக 3072 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா செல்லூர் பகுதி கழகச் செயலாளர் டி.ஏ. குரும்பன் தலைமையில் உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு ஆகியோர் முன்னிலையில் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. பொது மக்களுக்கு தையல் மிஷின் பானை போன்ற நலத்திட்டங்களை வழங்கினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா. ஜெயராம், மாவட்ட கழக நிர்வாகிகள் மா. ஒச்சு பாலு, மூவேந்திரன், சின்னம்மாள், மாநில நிர்வாகிகள் அக்ரி கணேசன், பாக்கியநாதன், கழக நிர்வாகிகள் ரவீந்திரன், ஜெயராஜ், மின்னல் கொடி, பொன்சேதுராமலிங்கம், அறிவு நிதி, மாயம்பெருமாள், நல்ல காமன், சுரேஷ்,முரளி கணேஷ்,பவுன்ராஜ் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர்கள் கலந்து கொண்டனர் .

### ஆத்தூர் ஒன்றியத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

# முதல்வர் தலைமையில் தமிழகத்தில் மக்கள் நலனுக்கான ஆட்சி நடைபெற்றது!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், மார்ச் 31 -

தமிழகத்திற்கு நான் கரை மாதங்களாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைத்திட்டத்தில் பணி செய்த பயனாளிக ளுக்கு மத்தியில் ஆளும் மோடி தலைமையிலான பாஜக அரசு ரூ.4 ஆயிரத்தி 34 கோடி வழங்காததை கண்டித்து ஆத்தூர் ஒன்றி யம் பித்தளைப்பட்டி பிரி வில் நடைபெற்ற மாபெ ரும் கண்டன ஆர்ப்பாட் டத்தில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரிய சாமி கலந்து கொண்டார்.

மத்தியில் ஆளும் பிரத மர் மோடி தலைமையி லான பா.ஜ.க. அரசு தமிழ கத்தில் 100 நாள் வேலைத் திட்ட பயனாளிகளுக்கு நான்கரை மாதங்களாக வழங்க வேண்டிய பணி செய்ததற்கான தொகை ரூ.4 ஆயிரத்தி 34 கோடியை வழங்காததை கண்டித்து தமிழகம் முழுவதும் ஒவ் வொரு ஒன்றியங்களிலும் 100 நாள் வேலைத்திட்ட பயனாளிகளை திரட்டி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என திமுக தலைவரும், தமிழக முதல்வர் அவர்களின் அறி வுரைக்கிணங்க தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப் பாட்டங்கள் நடைபெற்று வருகிறது.

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் சார்பாக பித்தளைப்பட்டி பிரிவில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத் திற்கு ஆத்தூர் கிழக்கு ஒன் றிய திமுக செயலாளர் பிள்ளை யார்நத்தம் முரு கேசன் தலைமை தாங்கி னார். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, துணை செயலா ளர் மார்கிரேட் மேரி, பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, தலைமை செயற்



குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், முன்னாள் ஒன் றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், துணை பெருந்தலை வர் ஹேமலதா மணிகண்டன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். பிள்ளையார் நத்தம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் உலக நாதன் வரவேற்று பேசி னார். சிறப்பு அழைப்பாள ராக கலந்து கொண்ட திமுக மாநில துணை பொது செயலாளரும், ஆத் தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்ச ருமான ஐ.பெரியசாமி அங்கு கூடியிருந்த நூற்றுக் கணக்கான பெண்கள் மத் தியில் பேசும் போது,

**அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!**

முத்தமிழ் அறிஞர் கலை ஞர் தமிழகத்தில் ஆட்சி செய்த போது மத்தியில் ஆண்ட காங்கிரஸ் அரசு கொண்டு வந்த திட்டம் தான் 100 நாள் வேலைத் திட்டம். இந்த திட்டத்தை தமிழகம் சிறப்பாக செயல் படுத்தியது. குறிப்பாக திண்டுக்கல் மாவட்டம் 20062010ம் வருடத்தில் 100 நாள் வேலைத்திட் டத்தை சிறப்பாக செயல்ப டுத்தி ஜனாதிபதியிடம் விருதும் பெற்றது. கழக ஆட்சியின் போது 4 வாரத் திற்கு ஒருமுறை 100 நாள் வேலைத்திட்ட பயனாளிக ளுக்கு சம்பளபணம் வழங் கப்பட்டது. ஆனால் இப் போது மத்தியில் ஆளும் மோடி தலைமையிலான பாஜக அரசு செப்டம்பர் மாதத்திற்கு பின்பு தமிழ கத்திற்கு வழங்க வேண் டிய 100 நாள் வேலைத் திட்ட த்திற்கான நிதியை முறையாக வழங்கவில்லை. ரூ. 4 ஆயிரத்தி 34 கோடி நிலுவையில் உள்ளது. திமு கவை பழி வாங்குவதாக நினைத்துக் கொண்டு கிரா மங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் வயிற்றில் அடிக்கிறது மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு என் றார். மோடி தலைமையி லான பாஜக அரசு நிதி வழங்காவிட்டாலும், இந்த திட்டத்தை புறக்கணித்தா லும் தொடர்ந்து கிராமங்க ளில் 100 நாள் வேலைத் திட்டத்தை தமிழக அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக நிதி பற்றாக்குறை இருந்தாலும் மக்கள் நலனுக்கான நலத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வரும் அர சாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை யிலான தமிழக அரசு உள் ளது என்றார். அதன்பின் னர் 100 நாள் வேலைத் திட்டத்திற்கு ரூ. 4 ஆயி ரத்தி 34 கோடி நிதி வழங் காத ஒன்றிய அரசைக் கண் டித்து கோஷம் இடப் பட்டது.

நிகழ்சியில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய அவைத்த லைவர் சிவக் குமார், துணை செயலாளர்கள் ராஜேந்திரன், எம்.சி. பாண்டி, வசந்தா கென் னடி, ஒன்றிய பொருளா ளர் தொப்பம்பட்டி கருப் பையா, மாவட்ட இளைஞ ரணி துணை அமைப்பா ளர் மணலூர் மணிகண் டன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவ ணன், மேற்கு ஒன்றிய துணை செயலாளர்கள் மல் லையாபுரம் சக்திவேல், கலாபச்சை, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் பத் மாவதி ராஜகணேஷ், மாவட்ட தகவல்தொழில் நுட்ப அணி துணை அமைப் பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம் பட்டி விவேகா னந்தன், பஞ்சம்பட்டி மணி, சின் னாளபட்டி பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், ஆனந்தி பாரதி ராஜா, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்கேயன், காணிக்கைசாமி, பாப் பாத்தி, வண்ணம்பட்டி காணிக்கை சாமி, வக்கம் பட்டி காணிக்கை ராஜ், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், இளைஞரணி அமைப்பா ளர் ராஜகணேஷ், மாவட்டப் பிரதிநிதி தங்க வேல், எம்.வி.முருகன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் ரெட்டிய பட்டி ராஜா, ஆலமரத்துப் பட்டி ஆறுமுகம், முன் னிலை கோட்டை அலெக்ஸ், சீவல்சரகு ராணி ராஜேந்திரன், அரசு ஒப்பந் தகாரர்கள் மெல்வின், ஜீசஸ் அகஸ்டின், விக் னேஷ்வரன், சின்னாளப் பட்டி பேரூர்கழக பொறுப் பாளர் பாலகிருஷ்ணன், மற்றும் பொறுப்புகுழு உறுப்பினர்கள், திமுக நிர் வாகிகள், இளைஞர் அணி யினர், மகளிர் அணியினர் மற்றும் நூற்று கணக்கான 100 நாள் வேலைத்திட்ட பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



100 நாள் வேலை திட்டத்தில் நிதி வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து திண்டுக்கல் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் வெள்ளி மலையில கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் மேயர் இளமதி ஜோதி பிரகாஷ் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



100 நாள்வேலை திட்டத்திற்கு ரூ.4034 கோடி நிதியை தமிழ்நாட்டிற்கு வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் திண்டுக்கல் மேற்கு மாவட்டம், நத்தம்தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர்பெ.ரத்தினகுமார், தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,சார்பு அணி நிர்வாகிகள், மாவட்ட ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.